மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கடலாடி.
முன்னிலை: திரு. நா. வெங்கடேசன், D.C.,B.A.,M.L.,PGDCLCF.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கடலாடி.
2023–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 03 ம் நாள் வியாழக்கிழமை

**I.A.No.01/2023**
**in**
**O.S. No.152/2019**

காளீஸ்வரி வகையறா .... மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்

**/எதிர்/**

1. நீலமேகம் .....1 ம் எதிர்மனுதாரர்/வாதி
2. வட்டாட்சியர்,
கடலாடி. ..........2 ம் எதிர்மனுதாரர்/4 ம் பிரதிவாதி

இந்த இடைநிலை மனு என் முன்பாக 01.08.2023 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.அரிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர்/4 ம் பிரதிவாதி தரப்பில் எதிருரை இல்லை என மேல்அழுத்தம் செய்தும், இருதரப்பு வாதங்களையும், எதிர்வாதங்களையும் கேட்டு, ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்றுவரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**<u>உத்தரவு</u>**

1) மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ளக்கோரி சி.பி.சி. கட்டளை 8 விதி 9, பிரிவு 151–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>:–**

வழக்கின் பிராதினை திருத்தம் செய்ய வேண்டி வாதி மனு செய்து

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2023.08.03 11:10:03 +0530

உத்தரவின்பேரில் 08.07.2019 ம் தேதியில் திருத்தப்பட்ட பிராது தாக்கல் செய்து, கூடுதல் எதிர்வழக்குரைக்காக வாய்தா வழங்கப்பட்டு, 18.09.2019 ம் தேதியில் திருத்தப்பட்ட பிராது திருப்பப்பட்டு, அதிலுள்ள குறைகள் சரி செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதன் பிறகு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு சிறிதும் வாய்ப்பு வழங்காமல் வழக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு விட்டது என்றும், அதன் பிறகு Covid-19-ஆல் தொடர் ஊரடங்கு ஏற்பட்டு விட்டது என்றும், பிராது தாக்கல் செய்த பிறகு ஆணையர் அறிக்கையை அடிப்படையாக வைத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ஒரு பகுதி வீட்டை இடிக்கவும், சுவாதீனமும், பரிகாரமும் வேண்டி இருப்பதால் கூடுதல் எழுவினாக்கள் வனைவதற்கு ஏதுவாக வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்கக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் மனுவின் சுருக்கம்</u>:

மனு அபிடவிட்டு பாரா 2-ல் சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரர்/1ம் பிரதிவாதிதான் நிரூபிக்க வேண்டும் என்றும், ஆணையர் தாவாச் சொத்தை பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிறகு சட்டப்படி முறையாக திருத்தம் கோரும் மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதில் மனுதார்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளும் நகல் பெற்று IA.No.514/2018 என்ற நம்பர் ஏற்பட்டு உபய தரப்பு விசாரணைக்கு பின்னர் தான் சமூகம் நீதிமன்றம் சுவாதீன, செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை திருத்த அனுமதி அளித்து மனு அனுமதித்து பிராதை திருத்தம் செய்து திருத்தப்பட்ட பிராதும் தாக்கல் செய்து இந்த மனுதார்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தாக்கள் வழங்கியும் தொடர்ந்து தாக்கல் செய்யாததால் தான் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் இல்லை என முடிக்கப்பட்டது என்றும், ஷை காலகட்டத்திலோ, அதனை தொடர்ந்தோ Covid-19 என்ற தொடர் ஊரடங்கு ஏற்படவில்லை. IA.No.514/2018 என்ற நம்பரில் அனுமதி பெற்று பரிகாரத்தை திருத்திய நிலையில் திருத்தப்பட்ட பிராது தாக்கல் செய்த பிறகுதான் ஷை விபரத்தை திருந்திய விபரம் தெரியவந்ததுபோல மனுதார்கள்

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2023.08.03 11:10:07 +0530

குறிப்பிட்டுள்ளனர் என்றும், மேலும் நீதிமன்றம் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்பு வழங்கியும், வழங்காததுபோல தெரிவித்திருப்பது தவறு என்றும், 1ம் மனுதாருக்கு உடல்நிலை சரியில்லை என குறிப்பிட்டுள்ளதில், 1ம் மனுதாருக்கு என்ன நோய் ஏற்பட்ட வகையில் உடல்நிலை சரியில்லாமல்போனது, வழக்கறிஞரை எப்பொழுது சந்தித்தார் போன்ற விபரங்களுக்கும் மனுவில் விளக்கமில்லை என்றும், கூடுதல் எதிர்வழக்குரையில் ஏற்கும் வகையில் அவசியமான விசயங்களை குறிப்பிடாததாலும், அசல் எதிர் வழக்குரையில் கண்ட விசயங்களுக்கு முரண்பட்டுள்ள நிலையில் உள்ளதால் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவை இந்த எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

வழக்கின் பிராதினை திருத்தம் செய்ய வேண்டி வாதி மனு செய்து உத்தரவின்பேரில் 08.07.2019ம் தேதியில் திருத்தப்பட்ட பிராது தாக்கல் செய்து, கூடுதல் எதிர்வழக்குரைக்காக வாய்தா வழங்கப்பட்டு, 18.09.2019ம் தேதியில் திருத்தப்பட்ட பிராது திருப்பப்பட்டு, அதிலுள்ள குறைகள் சரி செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதன் பிறகு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு சிறிதும் வாய்ப்பு வழங்காமல் வழக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு விட்டது என்றும், அதன் பிறகு Covid-19-ஆல் தொடர் ஊரடங்கு ஏற்பட்டு விட்டது என்றும், பிராது தாக்கல் செய்த பிறகு ஆணையர் அறிக்கையை அடிப்படையாக வைத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ஒரு பகுதி வீட்டை இடிக்கவும், சுவாதீனமும், பரிகாரமும் வேண்டி இருப்பதால் கூடுதல் எழுவினாக்கள் வனைவதற்கு ஏதுவாக வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்கக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் ஆணையர் தாவாச் சொத்தை

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2023.08.03 11:10:11 +0530

பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிறகு சட்டப்படி முறையாக திருத்தம் கோரும் மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதில் மனுதார்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளும் நகல் பெற்று IA.No.514/2018 என்ற நம்பர் ஏற்பட்டு உபய தரப்பு விசாரணைக்கு பின்னர் தான் சமூகம் நீதிமன்றம் சுவாதீன, செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை திருத்த அனுமதி அளித்து மனு அனுமதித்து பிராதை திருத்தம் செய்து திருத்தப்பட்ட பிராதும் தாக்கல் செய்து இந்த மனுதார்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தாக்கள் வழங்கியும் தொடர்ந்து தாக்கல் செய்யாததால் தான் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் இல்லை என முடிக்கப்பட்டது என்றும், ஷை காலகட்டத்திலோ, அதனை தொடர்ந்தோ Covid-19 என்ற தொடர் ஊரடங்கு ஏற்படவில்லை. IA.No.514/2018 என்ற நம்பரில் அனுமதி பெற்று பரிகாரத்தை திருத்திய நிலையில் திருத்தப்பட்ட பிராது தாக்கல் செய்த பிறகுதான் ஷை விபரத்தை திருந்திய விபரம் தெரியவந்ததுபோல மனுதார்கள் குறிப்பிட்டுள்ளனர் என்றும், மேலும் நீதிமன்றம் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்பு வழங்கியும், வழங்காததுபோல தெரிவித்திருப்பது தவறு என்றும், 1ம் மனுதாருக்கு உடல்நிலை சரியில்லை என குறிப்பிட்டுள்ளதில், 1ம் மனுதாருக்கு என்ன நோய் ஏற்பட்ட வகையில் உடல்நிலை சரியில்லாமல்போனது, வழக்கறிஞரை எப்பொழுது சந்தித்தார் போன்ற விபரங்களுக்கும் மனுவில் விளக்கமில்லை என்றும், கூடுதல் எதிர்வழக்குரையில் ஏற்கும் வகையில் அவசியமான விசயங்களை குறிப்பிடாததாலும், அசல் எதிர் வழக்குரையில் கண்ட விசயங்களுக்கு முரண்பட்டுள்ள நிலையில் உள்ளதால் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவை இந்த எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனு தாக்கல் செய்து எதிர்வாதம் வைத்துள்ளார்.

மேற்படி இருதரப்பில் சொல்லப்பட்ட வாதங்களையும், தாக்கல் செய்த ஆவணங்களையும் இந்நீதிமன்றம் பரிசீலனை செய்ததில், மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் வாதி தரப்பில் பிராதினை திருத்தம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்து அதில் உத்தரவு ஏற்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்ட நிலையில், கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் முடிக்கப்பட்டு விட்டது. இவ்வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2023.08.03 11:10:15 +0530

தாக்கல் செய்வதற்காக மனுதாரர்கள் தரப்பில் முன்வைத்த வாதத்தை பார்கையில், மனுதாரர் கோரிக்கை ஏற்புடையதாகவும், அப்போழுதுதான் வழக்கினை முழுமையாக தீர்வு செய்ய முடியும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவின் முகாந்திரம் மனுதாரருக்கு ஆதரவாக அமைந்துள்ளது. இவ்வழக்கில் ஏற்பட்ட காலதாமதத்தை ஈடுசெய்யும் பொருட்டு 1ம் எதிர்மனுதாரருக்கு மனுதாரர் ஈடு செய்ய வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மனுதாரர்களுக்கு வாய்ப்பளிப்பது ஏற்புடையதாக இந்நீதிமன்றம் கருதுவதால் 1ம் எதிர்மனுதாரருக்கு மனுதாரர்களால் ஏற்பட்ட சிரமத்திற்கு மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு ஈடு செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகை ரூ.2,000/-யை மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்று நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக. இம்மனு நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம் என தீர்மானித்து மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.2,000/- செலுத்தும் பட்சத்தில் இம்மனுவை அனுமதித்தும் தவறும் பட்சத்தில் மனுவை தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

மீண்டும் அழைக்க 04.08.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 03.08.2023 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2023.08.03 11:10:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2023.08.03 11:10:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் நீதிமன்றம், கடலாடி.
சீரான/வரைவு உத்தரவு
IA.No.01/2023
in
OS.No.152/2019
நாள். 03.08.2023